## முதல் இடைப்பருவத் தேர்வு - 2024 பொதுத்தமிழ் - 11th - விடைக்குறிப்பு

## அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, மதுக்கூர், தஞ்சாவூர் மாவட்டம்

### சரியானதைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 7 * 1 = 7

1. iii) ஆ,ஈ.
2. ஆ) பனுவல்.
3. ஈ) இவை மூன்றும்.
4. i) அ- மட்டும் சரி.
5. அ) அழகியல்.
6. அ) அன்னம், கிண்ணம்.
7. அ) ஜெயமோகன்.

### குறுவினா-விடை (மூன்றனுக்கு மட்டும் விடைதருக) 3 * 2 = 6

8. நூல் உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும், அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து, நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது பாயிரமாகும்.
9. "தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம் கூடில்லாத பறவை"
10. மரங்கள் வெட்டப்பட்டதால், காடுகள் அழிந்து போயின.
    மழை பெய்யவில்லை. மண்வளம் குன்றியது.
    இயற்கைச்சூழலில் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டதால், வாழ்வதற்கான சூழல் இல்லாததால், ஆதரவற்றனவாய்க் குருவிகள், இருப்பிடம் தேடி அலைந்தன.
11. சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று, ஒரு பறவையின் யாழ்வை எழுதிச் சென்றது.

### குறுவினா-விடை (இரண்டனுக்கு மட்டும் விடைதருக) 2 * 2 = 4

12. எழுத்துமொழி, பேச்சுமொழிக்குத் திரும்பும்போது வெளிப்பாட்டுச் சக்தி அதிகம் கொண்டதாக மாறி விடுகிறது. எழுத்துமொழி உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதில்லை. எனவே, எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி, உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.
13. உயிரெழுத்து (த் + உ), பன்னிரண்டு (ட் உ); உயிர் எழுத்து (குற்றியலுகர) ஈறு.
    திருக்குறள், நாலடியார் – மெய்எழுத்து ஈறு.
14. நம் தமிழ்நாட்டின் மாநில மரம் பனை.
    இது, ஏழைகளின் கற்பக விருட்சம்.
    சிறந்த காற்றுத் தடுப்பான்.
    ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமித்து வைக்கும் தன்மையுடையது.

### குறுவினா-விடை (ஒன்றனுக்கு மட்டும் விடைதருக) 1 * 2 = 2

15. மாநகர் - உரிச்சொற்றொடர் ; மஞ்ஞையும் கொண்டலும் - எண்ணும்மை.
16. அலர்+த்(ந்)+த்+உ ; அலர்-பகுதி; த்-சந்தி(ந் ஆனது விகாரம்); த்-இறந்தகாலஇடைநிலை; உ-வினையெச்ச விகுதி
    வை+த்+த்+ஆர்; வை-பகுதி; த்-சந்தி; த்-இறந்தகால இடைநிலை; ஆர்-பலர்பால் வினைமுற்று விகுதி
17. பொது+சிறப்பு (இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்)
    செம்மை+கயல் 1. ஈறுபோதல்(மை கெட்டது) 2. முன்னின்ற மெய் திரிதல்

## சிறு வினா-விடை

4 * 4 = 16

18. **அ)** நூலின் இயல்பு, ஆசிரியர் இயல்பு, கற்பிக்கும் முறை, மாணவர் இயல்பு, கற்கும் முறை, நூலாசிரியர், பெயர், நூல் பின்பற்றிய வழி, நூல் வழங்கப்படுகின்ற நிரப்பு, நூலின் பெயர், யாப்பு, நூலில் குறிப்பிடப்படும் கருத்து, நூலைக் கேட்போர், நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன் ஆகியன, முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக, நன்னூல் குறிப்பிடுகிறது.

**ஆ) இடம்** : திருமலை முருகன் பள்ளுவில், வடகரை நாட்டின் வளத்தைக் கூறும்போது, 'சலச வாவியில் செங்கால் பாயும்' என்று, பெரியவன் கவிராயரால் கூறப்படுகிறது.

**பொருள்** : நீர் நிறைந்த தாமரைத் தடாகத்தில், செம்மையான கயல்மீன்கள் துள்ளிப்பாய்ந்து, விளையாடும் என்பது பொருளாகும்.

**விளக்கம்** : வடகரை நாடு நீர் நில வளம் மிக்கது. அங்குத் தாமரை நிறைந்த குளத்தில், கயல் மீன்கள் அக்கமின்றித் துள்ளிப் பாய்ந்து விளையாடும்; மீனைப் பிடித்துண்ண வந்து சங்கிலியில் அமர்ந்துள்ள உள்ளான் பறவை, வண்டுகளின் இசையில் மயங்கி, வாலை ஆட்டியபடி அமர்ந்திருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதில் வடகரை நாட்டின் நீர், நிலவளம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

19. அ) எனக்கு உயிர் தந்தவள் தாய். தான் ஊட்டிய பாலோடு, உலகை அறிமுகம் செய்ய மாட்டி வளர்த்த மொழி தமிழ். என் உயிரோடு கலந்து உடலோடு வளர்ந்தது. வளர்ந்தபின் வளிமான மொழியைக் கற்றபோது, அதன் வளத்தோடு வீச்சும், ஆழமும் புரிந்தது.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்று, என் பாட்டன் பாரதி சொன்னதன் பொருளைப் புரிந்துகொண்டேன். "தமிழுக்கு அமுதென்று பேர்" என்று பாரதிதாசன் கூறியதைத் தெளிந்தேன். "தமிழன் என்றோர் இனமுண்டு! தனியே அவர்க்கோர் குணமுண்டு" என்று, நாமக்கல் கவிஞர் சொன்னதன் ஆழ்பொரும் அறிந்தேன். அதனால், என் தமிழை உயிரினும் மேலானதாக மதிக்கிறேன்.

ஆ) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி, நடைமுறைக்குச் சாத்தியமே.

பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்துவதால், மனிதர்களுக்குப் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன.

வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை ஆகிய அனைத்தையும் நன்றாக இடித்துக் கோமியத்தில் ஊற வைத்துப் பயிர்களில் தெளித்தால், பூச்சிகள் காணாமல் போய்விடும்.

வேதிக் கலப்பில்லாத பூச்சிக் கொல்லியால், நுண்ணுயிர்ப் பெருக்கம் ஏற்பட்டு, மண்வளம் பெருகும்.

20. அ) பயிர் வளர தண்ணீர் வேண்டும்; மயில் ஓர் அழகான பறவை

ஆ) தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது; மாலை நிலவு மனதை மகிழ்விக்கும்.

21. ஒரு படம் என்பது, ஆயிரம் வார்த்தைகளைவிட மதிப்புள்ளது.

உழைக்க வேண்டிய நேரத்தில் உழை! விளையாட வேண்டிய நேரத்தில் விளையாடு!

அறிவே உலகை ஆளுகிறது.

எழுதுகோலின் முனை, வாளின் முனையை விட வலிமையானது.

22. திரண்டகருத்து, மையக்கருத்துடன் ஏதேனும் நான்கு நயங்கள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.

## நெடு வினா- விடை 1 * 6 = 6

23. அ) **பாயிரம்** : நூலை உருவாக்கும் ஆசிரியரின் திறம் வாயும், அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது பாயிரமாகும். பாயிரம் (1) பொதுப்பாயிரம், (2) சிறப்புப் பாயிரம் என இருவகைப்படும்.

**(i) பொதுப்பாயிரம்** : எல்லா நூல்களின் முன்பிலும் பொதுவாக உரைக்கப்படுவது, பொதுப்பாயிரம் எனப்படும். நூலின் இயல்பு, ஆசிரியரின் இயல்பு, கற்பிக்கும் முறை, மாணவரின் இயல்பு, கற்கும் முறை என்னும் ஐந்தையும் கூறுவது, பொதுப்பாயிரம் ஆகும்.

**(ii) சிறப்புப்பாயிரம்** : தனிப்பட்ட பல நூல்களுக்கு மட்டும் சிறப்பாகக் குறிப்பிடப்படுவது, சிறப்புப்பாயிரம் எனப்படும்.

நூல் ஆசிரியரின் பெயர்; நூல் பின்பற்றிய வழி; நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு; நூலின் பெயர்; தொகை, வகை, விரி என்பவற்றுள் இன்னதில் இயற்றப்பட்டது என்னும் யாப்பு; நூலில் குறிப்பிடப்படும் கருத்து; 5நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன்;

இவற்றுடன் நூல் இயற்றப்பட்ட காலம்; அரங்கேற்றப்பட்ட அவைக்களம்; இயற்றப்பட்ட காரணம் ஆகியவற்றைச் சேர்த்துக் கூறுவதும் ஆகிய எல்லாச் செய்திகளையும் செம்மையாகத் தெரிவிப்பது, சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் ஆகும்.

**ஆ)** இயற்கை மற்றும் உயிரினப்பாதுகாப்பு ஆகியவை குறித்து பொருத்தமான ஆறு கருத்துகள் மற்றும் அதற்கு மேல் எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்

## மனப்பாடப் பகுதி 1 * 4 = 4

24. ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித் தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை
- சு.வில்வரத்தினம்

---

மூ.இராமச்சந்திரன்
முதுகலைத் தமிழாசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
மதுக்கூர், தஞ்சாவூர் மாவட்டம்.
அலைபேசி : 9786578871 / 6369784539

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com